முக்கிய வார்த்தைகள்:
*தலைமை தாங்கு*
*தன்மைகள் / பண்புகள்*
*நடத்தை / குணம்*

**இஸ்லாமிய சமய மன்றம் (சிங்கப்பூர்)**
**வெள்ளிக்கிழமைப் பிரசங்கம்**
**22 ஆகஸ்ட் 2025 / 28 ஸஃபர் ஹிஜ்ரி 1447**

# தலைமைத்துவம் நம்மிடமிருந்து ஆரம்பமாக வேண்டும்

الْحَمْدُ لِلَّهِ الَّذِي هَدَانَا لِلْبِرِّ وَالْإِحْسَانِ، وَجَعَلَ فِي نَبِيِّهِ أَكْمَلَ قَائِدٍ لِلْإِنسَانِ. أَشْهَدُ أَنْ لَا إِلَٰهَ إِلَّا ٱللَّهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. ٱللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَىٰ سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَىٰ آلِهِ وَأَصْحَابِهِ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ ٱللَّهِ، ٱتَّقُوا ٱللَّهَ حَقَّ تُقَاتِهِ، فَقَدْ فَازَ الْمُتَّقُوْنَ.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவைப் பற்றிய உணர்வையும், அவன் மீதான தக்வா [பக்தியையும்] நம்மில் ஏற்படுத்திக் கொள்வோமாக! அந்த அல்லாஹ் "அல்-ஹஸீப்" ஆக இருக்கின்றான்; அதாவது, நமது செயல்களைப் பற்றி கணக்கு கேட்பவனாக இருக்கின்றான். அல்லாஹ்வின் அனைத்து கட்டளைகளை நிறைவேற்றுவோமாக! அல்லாஹ் தடைசெய்துள்ள அனைத்து விஷயங்களை விட்டும் தவிர்ந்து கொள்வோமாக! நமது வாழ்க்கை, தொடர்ந்து அருள் புரியப்படட்டுமாக! நாம் அனைவரும் அல்லாஹ்வின் திருப்தியைப் பெறுவோமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**எனது அன்பிற்குரிய சகோதரர்களே!**

இன்றைய ”குத்பா” பிரசங்கம், தலைமைத்துவத்தைப் பற்றி விவாதிக்க உள்ளது. இது சம்பந்தமாக, அதாவது, குடும்பம், ஏதாவதொரு அமைப்பு அல்லது மாணவர் பேரவை போன்றவற்றுக்கு நாம் தலைவராக ஆகுவதற்கு முன்பாக நாம் என்ன செய்ய வேண்டும் என்பதைப் பற்றிச் சிந்திப்பது அவசியமாகும். இஸ்லாமிய நோக்கில், ஒரு தலைவர், மற்றவர்களுக்குத் தலைமை தாங்குவதற்கு முன்பாக, முதலில் தனக்குத் தானே தலைமைதாங்கி, வழிநடத்திக் கொள்வது அவசியமாகும்; அதாவது, தலைமைத்துவத்தின் சிறந்த தன்மைகளைத் தன்னுள் அவர் ஏற்படுத்திக் கொள்ள வேண்டும்.

நமது பாசத்திற்குரிய இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்கள் இவ்விஷயம் அவசியமானது எனப் பரிபூரணமாகப் புரிந்திருந்தார்கள். எந்த ஒரு விஷயத்தையும், தான் முதலில் செயல்படுத்தாமல் மற்றவர்களுக்கு அதைச் செய்யுமாறு ஏவியதில்லை. கீழ்படிந்து நடக்குமாறு மற்றவர்களுக்கு அவர்கள் கட்டளையிடும் முன்பாக, தானே கீழ்படிந்து நடக்கும் நல்லடியாராக இருந்தார்கள். அவர்களின் நடத்தையும் குணமும் அர்ப்பணிப்பு மிக்க நபரின் தன்மைகளை மிகச் சிறப்பாகப் பிரதிபலிப்பவையாக இருந்தன. இறைத்தூதர்[ஸல்] அவர்கள் பொறுமையாக இருக்குமாறு மற்றவர்களுக்கு உபதேசம் செய்யும் முன்பாக, அச்சிறப்புத் தன்மையை, தானே முதலில் பரிபூரணமாகப் பெற்றுத் திகழ்ந்தார்கள்; உச்சகட்டமானப் பொறுமையுடன் காணப்பட்டார்கள். திருக்குர்ஆனின் போதனைகளின் பிரகாரம் முதலில் தனது நடத்தைகளை வடிவமைத்த பின்பு தான், திருக்குர்ஆன் மூலம் மற்ற மக்களுக்கு அவர்கள் வழிகாட்டினார்கள், இறைத்தூதர்[ஸல்] அவர்கள் வீட்டில் இருக்கும் போது, அவர்களின் நடத்தையும் குணமும் எப்படி இருக்கும்? என செய்யிததினா ஆயிஷா [ரலி] அவர்கள், ஒரு நபித்தோழர் மூலம் கேட்கப்பட்ட போது, பின்வரும் கருத்துதான், ஆயிஷா [ரலி] அவர்களின் பதிலாக இருந்தது.

كَانَ خُلُقُهُ الْقُرْآنَ

பொருள்: "இறைத்தூதர்[ஸல்] அவர்களின் நடத்தையும் குணமும் திருக்குர்ஆனைப் போன்றிருந்தது"

இறைத்தூதர்[ஸல்] அவர்களின் இச்சிறப்புமிக்க தன்மைகளைப் பற்றியும், அவர்களின் தலைமைத்துவத்தைப் பற்றியும் திருக்குர்ஆனின் "அல்-அஹ்ஸாப்" எனும் அத்தியாயத்தின் 21-வது வசனத்தில் அல்லாஹ் பின்வருமாறு கூறுகிறான்:

لَّقَدْ كَانَ لَكُمْ فِى رَسُولِ ٱللَّهِ أُسْوَةٌ حَسَنَةٌ لِّمَن كَانَ يَرْجُوا۟
ٱللَّهَ وَٱلْيَوْمَ ٱلْـَٔاخِرَ وَذَكَرَ ٱللَّهَ كَثِيرًا ﴿٢١﴾

பொருள்: "நிச்சயமாக, அல்லாஹ்வின் தூதரிடம் நீங்கள் பின்பற்றுவதற்கு அழகிய முன்மாதிரி உள்ளது; அல்லாஹ்வின் மீதும் இறுதி நாளின் மீதும் ஆதரவு வைத்து, அல்லாஹ்வை அதிகம் தியானிப்போருக்கும் ஓர் அழகிய முன்மாதிரி உள்ளது"

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

இறைத்தூதர் முஹம்மது[ஸல்] அவர்களின் முழு வாழ்க்கையும், சுய தலைமைத்துவத்தின் பால், அதாவது, ஒருவர் தன்னைத் தானே தலைமைத்துவத்துக்குத் தகுதியானவராக ஆக்குவது எப்படி என்பதின் பால் சிறப்பாக வழிகாட்டுவதாக இருந்தது. அவர்களின் அந்த வழிகாட்டுதல் அனைத்து முஸ்லிம்களுக்கும் முன்மாதிரியாகவும் உதாரணமாகவும் அமைய வேண்டும். பின்வரும் இரண்டு விஷயங்கள் இறைத்தூதர்[ஸல்] அவர்களின் வாழ்க்கையின் மூலம் பெற வேண்டிய  மிகச் சிறந்த பாடங்களாகும்; அவற்றை நாம் அனைவரும் இணைந்து ஆர்வத்துடன் பின்பற்றுவது அவசியமாகும்.

**முதலாவது: இறைத்தூதர்[ஸல்] அவர்கள், வணக்க, வழிபாடுகளில் ஈடுபடுவதிலும் தன்னை அர்ப்பணித்துக் கொள்வதிலும் நிலைத்தன்மையுடன் [இஸ்திகாமத்] இருந்ததாகும்.**

இறைத்தூதர்[ஸல்] அவர்கள், தொடர்ந்து வணக்க, வழிபாட்டுச் செயல்களில் ஈடுபடுவதன் மூலம் அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவுடன் எப்போதும் தொடர்பை ஏற்படுத்திக் கொள்பவர்களாக இருந்தார்கள்.

வணக்க வழிபாடுகளில் ஈடுபடுவதில் நிலைத்தன்மையுடன் இருப்பதானது, சுய தலைமைத்துவத்தின் அடிப்படைத் தூணாக இருக்கின்றது. காரணம், அல்லாஹ்வுடனான ஆன்மீகத் தொடர்பு நம்மிடம் தொடர்ந்து காணப்பட்டால், அது நமது குணம் மற்றும் நடத்தையை நன்றாக வடிவமைக்கும்; அத்துடன், நற்காரியங்களைச் செய்வதற்கான ஆற்றலையும் நமக்கு வழங்கும். தொடர்படியான வணக்க, வழிபாடுகள், நம்மில் பொறுமையையும் விடா முயற்சியையும் சுய ஒழுக்கம் மற்றும் கட்டுப்பாட்டையும் ஏற்படுத்துகிறது. அதுமட்டுமல்ல, வாழ்க்கைச் சவால்களை சகிப்புத் தன்மையுடன் எதிர்கொள்ளும் ஆற்றலையும் நமக்கு வழங்குகிறது.

நம்மை நாம் அர்ப்பணித்துக் கொள்வதில் நிலைத்து நிற்பதானது, அல்லாஹ்வுக்கு நாம் நிறைவேற்ற வேண்டிய ”அமானத்” அதாவது அமானிதம் மற்றும் பொறுப்புகளை நமக்கு நினைவூட்டுவதாக உள்ளது. நிலைத்து நிற்கும் [இஸ்திகாமத்] இத்தன்மையாகிறது, நம்மையும் மற்றவர்களையும் நாம் வழிநடத்தும் போது, பரிபூரணமான மனத்தூய்மையுடன் வழிநடத்தும் வகையில் நமக்கு வழிகாட்டுகிறது. நமது நடத்தையைச் சீராக்குகிறது.

**இரண்டாவதாக, தலைமைத்துவமானது, நற்குணத்துடன் இணைந்திருப்பது அவசியமாகும்.**

இறைத்தூதர்[ஸல்] அவர்கள், நற்குணத்தின் விஷயத்தில் முன்மாதிரியாகவும் பிரபலமானவர்களாகவும் இருந்தார்கள். அவர்களிடம்

உச்சகட்டமான நேர்மை, நாணயம், பணிவு, கொள்கை ரீதியிலான தன்மைகள் போன்ற பல சிறந்த அம்சங்கள் காணப்பட்டன. இத்தன்மைகளை ஒவ்வொரு தலைவரும் பெற்றுத் திகழ்வது அவசியமாகும். சுருங்கக் கூறின், நற்குணமற்ற தலைமைத்துவமானது, குறைபாடுள்ள தலைமைத்துவமாக இருக்கும். நாம் ஏதாவதொரு துறையில் தலைவர்களாக ஆக விரும்பினால் நற்குணத்தால் நம்மை நாம் அலங்கரித்துக் கொள்வது அவசியமாகும்.

**அன்பும் அருளுமிக்க ஜமாஅத்தார்களே!**

சுய தலைமைத்துவம், அதாவது தலைமைத்துவத்தை அடைவதற்கு தனக்குத் தானே பயிற்சியளித்துக் கொள்வது தான், தலைமைத்துவத்தின் அடிப்படை அம்சமாகும். நமக்கு நாம் வழிகாட்டிக் கொள்ள முடியாத நிலையில் நாம் இருந்தால், அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவின் பொறுப்புள்ள, அவனுக்கு அடிபணிந்த அடியாராக நம்மை நாம் ஆக்க முடியாமலிருந்தால், மற்றவர்களுக்கு நாம் வழிகாட்ட முடியும் என எதிர்பார்க்க முடியாது.

எனவே, அல்லாஹ் சுப்ஹானஹு வதஆலாவுடனான நமது உறவை சீராக அமைத்துக் கொள்வதில் தொடர்ந்து நிலைத்தன்மையுடன் இருப்பதன் மூலமாகவும், வணக்க வழிபாடுகளின் விஷயத்தில் நேர்மையாக இருப்பதன் மூலமாகவும், நற்குணத்தால் நம்மை நாம் அலங்கரித்துக் கொள்வதன் மூலமாகவும் இறைத்தூதர்[ஸல்] அவர்களின் தலைமைத்துவப் பண்புகளை நாம் அனைவரும் இணைந்து ஆர்வத்துடன் பின்பற்ற முயற்சிக்க வேண்டும். இச்சீரிய பண்புகள், நமக்கும், நாம் யாருக்குத் தலைமைதாங்கி, வழிநடத்த விரும்புகிறோமோ அவர்களுக்கும் நன்மை மற்றும் நேர்மையின் பால் வழிகாட்டட்டுமாக! ஆமீன். யாரப்பல் ஆலமீன்.

**أَقُوْلُ قَوْلِي هَذَا وَأَسْتَغْفِرُ اللهَ العَظِيْمَ لِي وَلَكُمْ، فَاسْتَغْفِرُوهُ إِنَّهُ هُوَ الغَفُوْرُ الرَّحِيْم.**

**இரண்டாவது பிரசங்கம்**

الحَمْدُ للهِ حَمْدًا كَثِيرًا كَمَا أَمَرَ، وَأَشْهَدُ أَن لَا إِلَهَ إِلَّا اللهُ وَحْدَهُ لَا شَرِيكَ لَهُ، وَأَشْهَدُ أَنَّ سَيِّدَنَا مُحَمَّدًا عَبْدُهُ وَرَسُولُهُ. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِهِ وَأَصْحَابِهِ أَجْمَعِينَ. أَمَّا بَعْدُ، فَيَا عِبَادَ الله، اِتَّقُوا اللهَ تَعَالَى فِيمَا أَمَرَ، وَانتَهُوا عَمَّا نَهَاكُم عَنْهُ وَزَجَرَ.

أَلَا صَلُّوا وَسَلِّمُوا عَلَى النَّبِيِّ الْمُصْطَفَى، فَقَدْ أَمَرَنَا اللهُ بِذَلِكَ حَيْثُ قَالَ فِي كِتَابِهِ العَزِيزِ: إِنَّ اللهَ وَمَلَائِكَتَهُ يُصَلُّونَ عَلَى النَّبِيِّ يَا أَيُّهَا الَّذِينَ ءَامَنُوا صَلُّوا عَلَيهِ وَسَلِّمُوا تَسْلِيمًا. اللَّهُمَّ صَلِّ وَسَلِّمْ وَبَارِكْ عَلَى سَيِّدِنَا مُحَمَّدٍ وَعَلَى آلِ سَيِّدِنَا مُحَمَّدٍ.

وَارْضَ اللَّهُمَّ عَنِ الخُلَفَاءِ الرَّاشِدِينَ المَهْدِيِّينَ سَادَاتِنَا أَبِي بَكْرٍ وَعُمَرَ وَعُثْمَانَ وَعَلِيٍّ، وَعَن بَقِيَّةِ الصَّحَابَةِ وَالقَرَابَةِ وَالتَّابِعِينَ، وَتَابِعِي التَّابِعِينَ، وَعَنَّا مَعَهُم وَفِيهِم بِرَحْمَتِكَ يَا أَرْحَمَ الرَّاحِمِينَ.

اللَّهُمَّ اغْفِرْ لِلمُؤْمِنِينَ وَالمُؤْمِنَاتِ، وَالمُسْلِمِينَ وَالمُسْلِمَاتِ، الأَحْيَاءِ مِنهُم وَالأَمْوَاتِ. اللَّهُمَّ ادْفَعْ عَنَّا البَلَاءَ وَالوَبَاءَ وَالزَّلَازِلَ وَالمِحَنَ، مَا ظَهَرَ مِنْهَا وَمَا بَطَنَ، عَن بَلَدِنَا خَاصَّةً، وَسَائِرِ البُلْدَانِ عَامَّةً، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ انْصُرْ إِخْوَانَنَا الْمُسْتَضْعَفِيْنَ فِي غَزَّة وَفِي فِلِسْطِينَ وَفِيْ كُلِّ مَكَانٍ عَامَّةً، يَا أَرْحَمَ الرَّاحِمِينَ. اَللَّهُمَّ بَدِّلْ خَوْفَهُمْ أَمْنًا، وَحُزْنَهُمْ فَرَحًا، وَهَمَّهُمْ

فَرَجًا، يَا رَبَّ العَالَمِينَ. اَللَّهُمَّ اكْتُبِ السِّلْمَ وَالسَّلاَمَ وَالأَمْنَ وَالأَمَانَ لِلْعَالَمِ كُلِّهِ وَلِلنَّاسِ أَجْمَعِينَ. رَبَّنَا آتِنَا فِي الدُّنيَا حَسَنَةً، وَفِي الآخِرَةِ حَسَنَةً، وَقِنَا عَذَابَ النَّارِ.

عِبَادَ اللهِ، إِنَّ اللهَ يَأْمُرُ بِالعَدْلِ وَالإِحْسَانِ وَإِيتَاءِ ذِي القُرْبَى، وَيَنْهَى عَنِ الفَحْشَاءِ وَالمُنكَرِ وَالبَغْيِ، يَعِظُكُمْ لَعَلَّكُمْ تَذَكَّرُونَ، فَاذكُرُوا اللهَ العَظِيمَ يَذْكُرْكُمْ، وَاشْكُرُوهُ عَلَى نِعَمِهِ يَزِدْكُمْ، وَاسْأَلُوهُ مِن فَضْلِهِ يُعْطِكُم، وَلَذِكْرُ اللهِ أَكْبَرُ، وَاللهُ يَعْلَمُ مَا تَصْنَعُونَ.